7--

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 883--**டாக்டர் ஆ. ஞானசேகரன்**--மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மேல்மலையனூர் தொகுதி கணக்கன்குப்பம், நல்லான் பிள்ளை பெற்றாள் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுமா?

விடை:

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

நல்லான் பிள்ளை பெற்றாள் கிராமத்தில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு தனியார்க் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. 1996-97-ம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டப்பட உள்ளன. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் புதியக் கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான நிலம் நன்கொடையாகக் கிடைத்ததும் எடுத்துக் கொள்ளப்படும். கணக்கன் குப்பத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. மக்கள் தொகை அடிப்படையில் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

8--

ராமகுண்டம் அனல்மின் நிலையத்திலிருந்து தமிழ்நாடு பெறும் மின் அளவு

வினா எண் 1278--**திரு. கே. சுப்பராயன்**--மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ராமகுண்டம் அனல் மின் நிலையத்திலிருந்து தமிழ்நாடு பெற்று வருகிற மின்சாரம் எவ்வளவு?

(ஆ) அதை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

1996 ஆகஸ்ட் 20]

விடை:

மாண்புமிகு **திரு. ஆற்காடு நா. வீராசாமி,** மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) ராமகுண்டம் அனல் மின் நிலையத்தின் மொத்த உற்பத்தி திறன் 2100 மெகா வாட் ஆகும். இதில் தமிழ்நாட்டுக்கு 470 மெகா வாட் ஒதுக்கப்பட்டுள்ளது. (22.38 விழுக்காடு) நாள்தோறும் உற்பத்தி ஆகும் மின் அளவைப் பொறுத்து இந்த விகிதாசாரத்தில் தமிழ்நாட்டுக்கு மின்சாரம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

(ஆ) தேசிய அனல் மின் கழகம், ராமகுண்டம் அனல் மின் நிலையத்தில் இன்னுமொரு 500 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட பிரிவை நிறுவி விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தப் பிரிவு நிறுவப்பட்டவுடன், தமிழ்நாட்டின் பங்காக 110 மெகாவாட் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

9--

புளியரை ஊராட்சியில் மின்சார வசதி செய்து தருதல்

வினா எண் 1400--**திரு. கே. ரவி அருணன்**--மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செங்கோட்டை ஒன்றியம், புளியரை ஊராட்சி (முன்னீர் பள்ளம்), வாசுப்பையர் களத்தில் உள்ள வீடுகளுக்கு மின்சார வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை:

மாண்புமிகு **திரு. ஆற்காடு நா. வீராசாமி,** மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செங்கோட்டை ஒன்றியம், புளியரை ஊராட்சி (முன்னீர் பள்ளம்) வாசுப்பையர் களத்திலிருந்து வீடுகளுக்கு மின் இணைப்பு வேண்டி வந்துள்ள 17 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இந்த வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க 44 மின் கம்பங்களும் சுமார் 4.1 கி.மீ. மின் கம்பியும் தேவைப்படுகிறது.